உ

புதுச்சேரி அரசு

இந்து சமய நிறுவனங்கள் துறை

ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம்

திருநள்ளாறு

எண்:நிஅ(கோ)/ஸ்ரீதசுதே/திரு/2026-27/655 தேதி: 06/11/2026

ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு

திருநள்ளாறு ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானத்தின் சார்பாக 2027-ஆம் ஆண்டின் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு கீழ்கண்ட விபரப்படி, சுட்ட மண்பானைகளை திருநள்ளாறு, ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி திருக்கோவிலுக்கு கொண்டு வந்து அளிக்க, மண்பாண்டங்கள் தயாரித்து, விற்பனை செய்து வரும் முன்னனுபவம் மிக்க ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வ. எண்	பொருளின் விபரம்	உத்தேச எண்ணிக்கை	ஒரு பானையின் விலை (ரூபாயில்)		மொத்த தொகை (ரூபாயில்)
			எண்ணால்	எழுத்தால்	
1	10 லிட்டர் கொள்ளளவு கொண்ட (ஒன்றரைபடி அரிசி வடிக்கக்கூடிய) புதிய, தரமான, சுட்ட மண்பானைகளை இந்த திருக்கோவிலுக்கு கொண்டு வந்து அளிக்க	பொங்கல் பானை 800 எண்ணிக்கை			

ஒப்பந்தபுள்ளி சமர்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம்: 23/11/2026, மாலை: 04.00 மணி

ஒப்பந்தபுள்ளி பிரிக்கப்படும் தேதி மற்றும் நேரம் : 23/11/2026, மாலை: 04.30 மணி

ஒப்பந்தபுள்ளி நிபந்தனைகள்:

1. மேற்கூறிய அளவுடைய பானை ஒன்றிற்கு எவ்வளவு தொகை என்பதை எண்ணாலும், எழுத்தாலும் தெளிவாக குறிப்பிட வேண்டும்.
2. குறைந்த தொகை கோரும் ஒப்பந்ததாரருக்கே பணி ஆணை வழங்கப்படும். பானைகள் அனைத்தும் 10.01.2027-**ஆம்** தேதிக்குள் சப்ளை செய்யப்பட வேண்டும். உடைந்த, பழுதான, கொள்ளளவு குறைவான, தரமற்ற பானைகள் நிராகரிக்கப்படும். மேற்கூறிய வேலைக்கு எவ்வித முன்பணமும் வழங்கப்படமாட்டாது.
3. மேற்கண்ட பானைகளை ஏற்றவோ, இறக்கவோ தேவஸ்தானத்திலிருந்து எந்தவித ஆட்களோ, வாகனமோ, வழங்கப்படமாட்டாது மற்றும் ஒப்பந்ததாரர் சொந்த செலவிலேயே இத்தேவஸ்தானத்திற்கு கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு பானைகள் ஒப்படைக்கப்பட்ட பின்னரே அதற்குரிய தொகை வங்கி மூலமாக மட்டுமே பட்டுவாடா செய்யப்படும்.
4. மேற்குறிப்பிட்ட அளவுடைய மாதிரி மண்பானையினை அலுவலக நேரத்தில் நேரில் வந்து பார்த்து செல்லலாம்.
5. மேற்கண்ட ஒப்பந்தபுள்ளியை ஏற்கவோ, நிராகரிக்கவோ, தேவஸ்தான நிர்வாக அதிகாரி அவர்களுக்கு முழு உரிமையுண்டு. அவரின் தீர்ப்பே இறுதியானது.

SRI DHARBARANYESWARA SWAMY DEVASTHANAM THIRUNALLAR

நிர்வாக அதிகாரி 06/11/26